# பொதுக்காலம் நான்காம் வாரம்
## திருவழிபாடு ஆண்டு - C

**இன்றைய வாசகங்கள்:**

**எரேமியா: 1:4-5,17-19, 1 கொரி 12:31-13:13, லூக்கா 4:21-30**

## திருப்பலி முன்னுரை:

இறை அன்பில் நிறைந்தவர்களாய் ஆண்டவரின் நாளான ஆண்டின் பொதுக்காலம் 4 ஆம் வாரத் திருப்பலி வழிபாட்டில் பங்கேற்க வந்திருக்கும் இறை மக்கள் அனைவருக்கும் என் அன்பான வாழ்த்தைக் கூறி மகிழ்கிறேன்.

உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கிறேன் என்கிறார் ஆண்டவர். விடுதலை தருபவர் இயேசு, நம்மை விடுவிக்க வருபவர் இயேசு: இரக்கத்தின் ஆண்டவர் நாம் தன்னுடைய அன்பையும் இரக்கத்தையும் முழுமையாகப் பெற்று மகிழவும், நம்மைத் தூய்மைப்படுத்தி புதுப்பித்து வழிநடாத்தவும் தூய இறைவாக்கினர்களையும், குருக்களையும் தாமேதெரிந்தெடுத்து, அர்ச்சித்து நமக்குப் பணிபுரிய நம் மத்தியில் அனுப்புகின்றார் என்பதனையும்: உண்மை அன்பு என்றால் என்ன: அது எப்படி வாழப்படவேண்டும் என்பதனையும் இன்றைய இறை வார்த்தைகள் நமக்கு எடுத்தியம்புகின்றன.

திருமுழுக்கு வழியாக இறைவனின் அன்புப் பிள்ளைகள் என்னும் மாபெரும் உரிமையையும், உறவையும், அன்பையும் கொடையாகப் பெற்றுள்ள நாம் அனைவரும்: உண்மையான அன்பை நம்முடைய வாழ்வாலும், வார்த்தையாலும் வாழவும், பகிரவும் அழைக்கப் படுகின்றோம். எனவே நமக்குள் குடிகொண்டிருக்கும் பகைமை, வெறுப்பு, போட்டி மனப் பான்மை முதலியவற்றை வேரறுத்து உண்மையான இறைமக்கள் சமூகமாக வாழ நம்மை அர்ப்பணித்து தொடரும் பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**என்றும் மாறாத மிகுந்த இரக்கமுள்ள இறைவனே!**
திருச்சபையை வழிநடத்தும் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், இருபால் துறவிகள், பொதுநிலையினர் அனைவரும் இரக்கத்தின் ஆண்டில் கடவுளால் அன்பு செய்யப்படுபவர்களாகவும், நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து வாழந்தலே அது கிறிஸ்துவின் உடலாக மாறிவிடும் என்பதை உணர்ந்தவர்களாக வாழவும், மற்றவர்களின் துன்பத்திலும், மகிழ்ச்சியிலும் இணைந்திருக்க வேண்டிய நல்லமனதினை வழங்கிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**ஒருவர் ஒருவரின் சுமைகளைத் தாங்கிக் கொள்ள சமூக உறவை உருவாக்கிய அன்புத் தந்தையே இறைவா!**
உம்மைப் போற்றுகிறேன். என்னுடைய குடும்பத்தினரை, நண்பர்களை முற்சார்பு எண்ணங்களோடு பார்த்த நேரங்களுக்காக என்னை மன்னியும். அனைவரையும் திறந்த மனதுடன், புதிய பார்வையில் சந்திக்கின்ற அருளைத்தாரும், எமது சமூகத்திற்காக உம்மிடம் இரந்து வருகின்றோம். இன்றைய நாட்களில் சமூக உறவுக்கும் ஒற்றுமைக்கும் மகிழ்ச்சிக்கும் தடையாக இருக்கும் அனைத்துத் தீமைகளையும் உமது இரக்கத்தால் தகர்த்தெறிந்து நாம் அனைவரும் ஒரே உள்ளமும், ஒரே மனமும் உடையவர்களாச் செயற்பட்டு இறையரசின் கருவிகளாகவும், சமாதானத்தின் தூதுவர்களாகவும், உமது சாட்சிகளாகவும் செயற்பட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**என்னைக் கை பிடித்து நடக்கப் பழக்கின தந்தையே! எம் இறைவா!**
எங்கள் குடும்பங்கள் இயேசுவின் மறைஉடலில் இணைந்திருக்கவும், ஒருவரை ஒருவர் அன்பிலும், செபத்திலும் தாங்கிக் கொள்ளவும், துன்பங்களில் ஆறுதலாக இருக்கவும், மகிழ்ச்சி பெருமையோடு பகிர்ந்து கொள்ளவும், குடும்பங்களில் தியாக உணர்வுகள் நிறைந்திருக்கவும் உமது அருள்வரங்களை நிறைவாய் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நிறைவாழ்வு தரும் ஊற்றான இயேசுவே,**
உமது பணித்திட்ட அறிக்கை உமது இலக்குத் தெளிவைக் காட்டகிறது. இறைக்குலமாகிய நாங்களும் உம்மைப் போல, பணி இலக்குகளை உருவாக்கி, அவற்றைச் செயல்படுத்த அருள்தாரும். இன்று நாம் சந்திக்கும் எல்லா பிரச்சினைகளுக்கும் விடை நாம் வைத்திருக்கும் இறைவார்த்தையில் இருக்கின்றது. அந்த இறைவார்த்தையை வாசிக்கவும், கேட்கவும் நாங்களும் முயற்சி செய்ய இறைவா அருள் வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**எங்களை உமது உரிமைச் சொத்தாகத் தேர்ந்து கொண்ட எம் இறைவா!**
எங்கள் குடும்பங்களில் இறைமகனின் வருகையை உணர்ந்திடவும், தெளிவற்று திகைத்து நிற்பவர் தெளிவு பெறவும், கொள்கைப் பிடிப்பின்றி வாழ்பவர் கொள்கைப் பிடிப்புடன் வாழவும், பிறரன்பில் தழைத்திடவும் உமது அருள்வரங்களை நிறைவாய் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**மனிதனாக அவதரித்த மாபரனின் தந்தையே!**
எங்கள் சமூகத்தில் இடம் இல்லாமல் அலைந்து கொண்டிருக்கும் ஏழைகள், அநாதைகள், கைவிடப்பட்டோர், மாற்று திறனாளிகள் அனைவரையும் ஆசீர்வதித்து அவர்கள் மறுவாழ்வு பெறவும், எங்கள் ஒவ்வொருடைய உள்ளத்திலும் அவதரித்து அன்பு, அமைதி, சமாதானம் போன்ற புண்ணியங்களை எங்களுக்கு பொழிந்தருள வேண்டுமாய், பிறந்திருக்கின்ற இயேசுபாலன் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை வழங்கும் தந்தையே!**
இன்று இத்திருப்பலியில் பங்குகொள்ளமுடியாமல் நோயுற்றிருப்போர், சிறைகளிலும், வதைமுகாம்களிலும் இருப்போர், அகதிகள் முகாம்களில் இருப்போர், பல்வேறு வேலைத்தளங்களில் பணியாற்றுவோர், பயணம் செய்வோர் அனைவர் மீதும் மனமிரங்கி, அவர்களும் இன்றைய நாளின் மகிழ்வையும், ஆசீரையும் பெற்று மகிழச் செய்தருள வேண்டுமென்றும், நிலையற்ற இந்த உலகின் செல்வங்களைத் தேடி மன நிம்மதியை இழந்து நிற்கும் மக்கள் அனைவரும், நிலையான செல்வமாகிய உம்மில் நிம்மதி காண அருள்புரியவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**தாயும் தந்தையுமான இறைவா,**
உடல், உள நோயினால் வேதனையுறும் அனைவரையும் நீர் இரக்கத்துடன் கண்நோக்கி: அவர்களின் வேதனையைத் தணித்து, நிறைவான உடல், உள நலத்தை அளித்துக் காத்திட வேண்டுமென்றும், இன்று எமது சமூகத்திலே வீணான விவாதங்களாலும், குழப்பங்களாலும், தவறான போதனைகளாலும், பிடிவாதத்தாலும், உறவை முறித்து, விசுவாசத்தை மறந்து பாதை மாறிச் செல்லும் அனைவர்மீதும் மனமிரங்கி உமது வழியில் செல்ல அவர்களை வழிப்படுத்தியருள வேண்டுமென்றும், எமது இளைஞர்களை நிறைவாக ஆசீர்வதியும். அவர்களது இளமைப் பருவத்தின் பாவங்களையும், குற்றங்களையும் நினையாது உமது இரக்கத்தையும், உமது பேரன்பையும் அவர்கள் மேல் பொழிந்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.